முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டம்.

முன்னிலை: - செல்வி. M. அலிமா, B.A.,B.L.,
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

2017ம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ம் நாள், செவ்வாய்க்கிழமை .

**இ ம.எண். 430/2016**

**இன்**

**அசல் வழக்கு எண். 694/2003**

உவரி ஸ்ரீ சுயம்புலிங்கசுவாமி கோவில்,
உவரி அதற்காக அதன் ஹெரிடிட்டரி டிரஸ்ட்
அதற்காக அதன் டிரஸ்டி P.K.S.T. ராதாகிருஷ்ணன்

WEB COPY

... மனுதாரர்/வாதி

-எதிர்-

1. T.R. விஜயராஜன் (இறப்பு)
2. S. ரதீஷன் நாயர்
3. J. பரமானந்தம் (இறப்பு)
4. R. ஜனதாகுமாரி
5. S. கலைசாந்தி
6. G. கோசல்ராம் ... எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இம்மனுவானது, 16.03.2017 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L. ராஜதுரை அவர்கள் ஆஜராகியும், 2வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சிதம்பரம் அவர்கள் ஆஜராகியும், 5வது மற்றும் 6வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரெத்தினசுவாமி அவர்கள் ஆஜராகியும், 1வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட

மனு, 2வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு வாதுரைகளை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன் கீழ் காலம்சென்ற 3வது எதிர்மனுதாரர்/3வது பிரதிவாதியின் வாரிசுகளின் முகவரியை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்ககோரி மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :-

மனுதாரர்/வாதியால் இம்மனுவானது விளம்புகை மற்றும் தபசில் சொத்தின் சுவாதீனத்தை திரும்ப கேட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி காலம்சென்றுவிட்டதாக 3ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதியின் வழக்கறிஞரால் குறிப்பாணையானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றும், மனுதாரர்/வாதி பல்வேறு வகையில் முயற்சி செய்தும் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் எந்த முகவரியில் வசித்து வருகிறார்கள் என்று தெரிந்துகொள்ள இயலவில்லை என்றும், 1வது எதிர்மனுதாரர்/1வது பிரதிவாதியே தபசில் சொத்தினை 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார் என்றும், எனவே 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் பற்றி நன்கு தெரியும் என்றும், எனவே காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் முகவரியை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.. 2 வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-

இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கூறியுள்ள சங்கதிகளில் 2வது மற்றும் 4வது எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவைகள் மறுக்கப்படுகிறது

WEB COPY

என்றும், மனுதாரா் டிரஸ்ட்டின் நிா்வாகி என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவா் என்றும், மனுதாரருக்கு இம்மனு தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றும், காலம்சென்ற 3ம் எதிா்மனுதாரா்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் பற்றி எதிா்மனுதாரா்களுக்கு தெரியாது என்றும், காலம்சென்ற 3ம் எதிா்மனுதாரா்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் எங்கு வசிக்கிறாா்கள் என்பதை கண்டுபிடிக்க வேண்டியது மனுதாரா்/வாதியின் கடமை என்றும், மனுதாரா்/வாதி மேற்படி கடமையை எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள் மீது சுமத்த முடியாது என்றும் எனவே இம்மனுவானது 2வது மற்றும் 4வது எதிா்மனுதாரா்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 2வது மற்றும் 4வது எதிா்மனுதாரா்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5வது மற்றும் 6வது எதிா்மனுதாரா்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் 20.12.2016 அன்று 5வது மற்றும் 6வது எதிா்மனுதாரா்கள் இந்நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளாா்கள்.

WEB COPY

3. தீா்வுக்குரிய பிரச்சினை :-

இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4. மனுதாரா் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு , 2வது மற்றும் 4வது எதிா்மனுதாரா்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டது.

5. மனுதாரா்/வாதியால் இம்மனுவானது காலம்சென்ற 3ம் எதிா்மனுதாரா்/3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் முகவரியை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி எதிா்மனுதாரா்களுக்கு உத்தரவு பிறப்பிக்ககோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரா்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞா் தனது வாதத்தில் பல்வேறு வகையில் முயற்சி செய்தும் காலம்சென்ற 3ம் எதிா்மனுதாரா்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் எந்த முகவரியில் வசித்து வருகிறாா்கள் என்று மனுதாரா்/வாதியால் தெரிந்துகொள்ள இயலவில்லை என்றும், 1வது எதிா்மனுதாரா்/1வது பிரதிவாதியே தபசில் சொத்தினை 2 முதல் 6 எதிா்மனுதாரா்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை

செய்துள்ளார் என்றும், எனவே 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் பற்றி நன்கு தெரியும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் பற்றி எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது என்றும், காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள் எங்கு வசிக்கிறார்கள் என்பதை கண்டுபிடிக்க வேண்டியது மனுதாரர்/வாதியின் கடமை என்றும், மனுதாரர்/ வாதி மேற்படி கடமையை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுமத்த முடியாது என்றும் வாதிட்டார்.

8. அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்/ வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 22.04.2014 அன்று 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் தரப்பு வழக்கறிஞரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் அடிப்படையில் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி 27.03.2014அன்று காலம் சென்ற விபரம் இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

WEB COPY

9. இந்த நிலையில் 22.06.2014 முதல் 24.09.2016வரை சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சி சேர்க்க அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது மனுதாரர்/வாதியின் கடமையாகும்., மனுதாரர்/வாதி மேற்படி கடமையை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுமத்த முடியாது. மேலும் காலம்சென்ற 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் முகவரிகள் பற்றி தெரிந்துகொள்ள மனுதாரர்/வாதி தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தனது மனுவில் கூறவில்லை.

மனுதாரர்/வாதியின் செயல் நீதிமன்ற நடவடிக்கையை காலமாதப்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது. எனவே இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று நீதியின் நலன் கருதி இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

11. **இறுதியாக,**

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2017ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

WEB COPY

(ஒம்/ M. அலிமா)
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
நாகர்கோவில்.

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | - | இல்லை |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - | இல்லை |

மு.கூ.மா.உ.நீ.

WEB COPY